போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்

III-வது பாகத்தின் ஸப்ளிமென்ட்

SUPPLEMENT TO PART III OF THE FORT ST. GEORGE GAZETTE,

JUNE 27, 1922.

நெ. 9 (5).] மதராஸ்: செவ்வாய்க்கிழமை மாலை, 1922-ம் ௵ ஜூன் ௴ 27௳. [விலை, 9 பை.

இந்தியா கவர்ன்மென்ட் ஆக்ட்

ACT OF THE GOVERNMENT OF INDIA

இந்திய சட்டநிருபண சபையாரால் செய்யப்பட்டு கவர்னர்ஜெனரலவர்களால் அங்கீகரிக்கப்பட்ட ஆக்டுகள்.

இந்திய சட்டநிருபண சபையாரால் செய்யப்பட்ட அடியிற்கண்ட ஆக்டானது - 1922-ம் ௵ மார்ச் ௴ 5௳ கவர்னர் ஜெனரலவர்களால் அங்கீகரிக்கப்பட்டு, இதனால் யாவர்க்கும் தெரியும்படி பிரசித்தஞ்செய்யப்படுகிறது :—

ACT No. VII OF 1922.

1922-ம் ௵த்து 7-வது ஆக்ட்.

AN ACT TO AMEND THE LAW RELATING TO EMIGRATION.

ஆள்கள் குடியேறுவதைக்குறித்த சட்டத்தைத் திருத்துவதற்கான ஆக்ட்.

ஆள்கள் குடியேறுவதைக்குறித்த சட்டத்தைத் திருத்துவது யுக்தமாயிருக்கிறபடியால், இதனால் விதிக்கப்படுகிறதென்னவென்றால் :—

1-ம் அத்தியாயம்.

பீடிகா விதிகள்.

சுருக்கமான பெயரும், வியாபகமும்.

1. (1) இந்த ஆக்டை, (ஆள்கள்) குடியேறுவதைக்குறித்த 1922-ம் ௵த்திய இந்துதேசத்து ஆக்டென்று சொல்லலாம்.

(2) இது - ப்ரிடிஷ் இந்தியா முழுமைக்கும் வியாபிக்கிறது.

அர்த்தம்.

2. (1) இந்த ஆக்டிலே, சங்கதியினாலாவது முன்பின் தொடர்ச்சியினாலாவது விரோதமொன்றுமில்லாவிட்டால்,—

(a) "அடுத்த நபர்" என்பது - யாதொரு குடியேறுகிறவருக்கு பந்துவாயிருக்கிற யாதொரு ஸ்திரீ அல்லது சிறுபிள்ளை என்றும், யாதொரு குடியேறுகிறவருக்கு பந்து

வாய் வயதுசென்றுவது பலமொடுங்கிப்போயாவதிருக்கிற யாதொரு நபர் என்றும் அர்த்தமாகும் ;

(b) "குடியேறுகிறவர்" அல்லது "குடியேறினவர்" என்பது - இந்த ஆக்டின்படி குடியேறுகிற அல்லது குடியேறியிருக்கிற அல்லது குடியேறுகிறவரென்று ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிற யாதொரு நபர் என்று அர்த்தமாவதுமல்லாமல், அதில் குடியேறுகிறவரைச் சேர்ந்த யாதொரு அடுத்த நபர் என்பதும் அடங்கும் ; ஆனால், அதில்—

(i) ஐந்து வருஷத்துக்குக் குறையாமல் தாம் வாசம் செய்திருக்கிற தேசத்திற்குப் போய் குடியேறும் யாதொரு நபர் அல்லது அப்படிப்பட்ட நபரின் மனைவி அல்லது குழந்தை யென்பதும்,

(ii) சட்டப்படி குடியேறியிருக்கிற யாதொரு நபரின் மனைவி அல்லது குழந்தை அப்படிப்பட்ட நபரிடம் போயச் சேருவதற்காகப் போகும்போது, அப்படிப்பட்ட மனைவி அல்லது குழந்தை யென்பதும்

அடங்காது ;

(c) "குடியேற" "குடியேறுதல்" என்பவை—

(i) இந்தியாவின் எல்லைகளுக்கப்பாலிருக்கிற யாதொரு தேசத்தில் கூலிக்கு வேலைசெய்வதாக உடன்படிக்கை செய்துகொண்டு போகிற யாதொரு நபரும்,

(ii) யாதொரு நபர் ஒரு பந்துவினாலன்றி மற்றப்படி போக சகாயம் செய்யப்பட்டு, அவர் இந்தியாவின் எல்லைகளுக்கப்பாலிருக்கிற யாதொரு தேசத்தில் கூலிக்கு வேலை செய்யும் அல்லது விவசாயத்தில் அமரும் காரியத்துக்காகவாகிலும் உத்தேசத்துடனாகிலும் போகிற பட்சத்திலே அப்படிப்பட்ட யாதொரு நபரும்

ப்ரிடிஷ் இந்தியாவைவிட்டு கடல் மார்க்கமாய்ப் போவதென்று அர்த்தமாகும் ;

(d) "நிர்ணயிக்க" என்பது - இந்த ஆக்டின்படி செய்யப்பட்ட விதிகள் மூலமாய் நிர்ணயிக்க என்று அர்த்தமாகும் ;

(e) "வேலை" என்பது - அதன் இலக்கண வேறுபாடுகள் உட்பட, திறமை வேண்டியிருக்கும் அல்லது திறமை வேண்டியிராத வேலையென்று அர்த்தமாகும் ;

(f) "திறமை வேண்டியிருக்கும் வேலை" என்பது—

(i) சிற்பனுக வேலைசெய்வது, அல்லது

(ii) குமஸ்தாவாகவாவது கடையில் உதவியாளாகவாவது வேலை செய்வது, அல்லது

(iii) யாதொரு பொருட்காட்சி அல்லது சபாரஞ்சித காரியத்தின்பொருட்டு வேலைசெய்வது, அல்லது

(iv) யாதொரு போஜனவீடு, தேத்தண்ணீர் சவதரிக்கும் இடம் அல்லது பொதுஜனங்கள் கூடுகிற வேறே இடத்தில் ஊழியம் செய்வது, அல்லது

(v) வீடுகளில் ஊழியம் செய்வது, அல்லது

(vi) திறமை வேண்டியிருக்கும் வேலையென்று ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் இந்தியா கெஜெட்டில் விளம்பரமூலமாய் நிர்ணயிக்கக்கூடிய வேறே யாதொரு தொழில்

என்று அர்த்தமாகும் ;

(g) "திறமை வேண்டியிராத வேலை" என்பதில் விவசாயத்தில் அமர்வுதும் என்பதும் அடங்கும்.

(2) இந்த ஆக்டின் தாற்பரியப்படி—

(a) யாதொரு நபர் குடியேறுகிறவரா, அல்லது

(b) யாதொரு வேலை திறமை வேண்டியிருக்கும் வேலையா அல்லது திறமை வேண்டியிராத வேலையா, அல்லது

(c) யாதொரு நபர் பந்துவினாலன்றி மற்றப்படி சகாயஞ் செய்யப்பட்டிருக்கிறாரா

என்பதைக்குறித்து சட்டப்படிக்கான எந்த நடவடிக்கைகளாகிலும் நடந்துகொண்டிருக்கையிலன்றி மற்றப்படி, யாதொரு சந்தேகமாவது விவாதமாவது ஏற்படுகிற விஷயத்திலே, அந்த விஷயம் - பிரதேச கவர்ன்மென்டார் நிர்ணயிக்கக்கூடிய நபரால் அவர்கள் நிர்ணயிக்கக்கூடிய மாதிரியாகத் தீர்மானிக்கப்படவேண்டும் ; அப்படிப்பட்ட தீர்மானம் முடிவானதாகும்.

2-ம் அத்தியாயம்.

குடியேறுகிறவர்களின் சம்ரட்சகர்களும் வைத்திய பரிசீலகர்களும்.

குடியேறுகிறவர்களின் சம்ரட்சகர்களை நியமிப்பது.

3. (1) ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களின் மேல்விசாரணைக்குட்பட்டு, பிரதேச கவர்ன்மெண்டார்-தங்களால் பரிபாலனஞ் செய்யப்படும் ராஜ்ஜியங்களுக்குள் இருக்கும் எந்த ரேவிலிருந்து குடியேறுவது சட்டசம்மதமாகுமோ அப்படிப்பட்ட யாதொரு ரேவுக்காகக் குடியேறுகிறவர்களின் சம்ரட்சகராயிருக்கும்படி யாதொரு நபரை நியமிக்கலாம்.

(2) குடியேறுகிறவர்களுக்காக அந்தப்படி நியமிக்கப்பட்ட யாதொரு சம்ரட்சகருடைய அதிகாரம் இன்ன விஸ்தீரணம்வரையில் செல்லுமென்று பிரதேச கவர்ன்மெண்டார் வரையறுக்கலாம்.

1860-ம் வருஷத்து 45-வது ஆக்ட்.

(3) குடியேறுகிறவர்களின் சம்ரட்சகர் ஒவ்வொருவரும் இந்தியன் பினல் கோடின் தாற்பரியப்படி ஸர்க்கார் உத்தியோகஸ்தராவார்.

சம்ரட்சகருடைய சாதாரணமான அலுவல்கள்.

4. குடியேறுகிறவர்களின் பிரதி சம்ரட்சகரும் - இந்த ஆக்டினாலாவது அதன்படியாவது தமக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும் விசேஷ அலுவல்களுடன் கூட—

(a) குடியேறுகிறவர்கள் எல்லாரையும் காப்பாற்றவும் அவர்களுக்கு யோசனை சொல்லி உதவிபுரியவும் வேண்டும்;

(b) இந்த ஆக்டிலும் அதன்படி செய்யப்பட்ட விதிகளிலும் சொல்லியிருக்கிற சகல நிபந்தனைகளின்படிக்கும் நடந்துவரும்படி தம்மால் கூடியமட்டில் செய்யவேண்டும்;

(c) திரும்பிவரும் குடியேறினவர்களைத் தாம சம்ரட்சகராயிருக்கிற ரேவுக்கு ஏற்றிக்கொண்டுவரும் மரக்கலங்களைப் பிரதேச கவர்ன்மெண்டார் நிர்ணயிக்கக்கூடிய அளவுக்கும் மாதிரியாகவும் அவை வந்துசேருகிற காலத்தில் பார்வையிடவேண்டும்;

(d) திரும்பிவரும் குடியேறினவர்கள் எந்த தேசத்திற்குக் குடியேறினார்களோ அந்த தேசத்தில் அவர்கள் வாசஞ்செய்துகொண்டிருந்த காலத்திலும் திரும்பிப் பயணமாய் வந்த காலத்திலும் அவர்கள் எவ்விதமாய் நடத்தப்பட்டார்களென்று விசாரித்து. அதைக் குறித்துப் பிரதேச கவர்ன்மெண்டாருக்குத் தெரிவிக்கவேண்டும்;

(e) திரும்பிவரும் குடியேறினவர்களுக்கு நியாயமாய்த் தம்மாலானமட்டில் சகாயஞ்செய்யவும் யோசனை சொல்லவும் வேண்டும்; மேலும்,

(f) கடல்மார்க்கமாய் ப்ரிடிஷ் இந்தியாவைவிட்டுப்போக உத்தேசிக்கும் யாதொரு நபர் 2-வது பிரிவில் குடியேறுகிறவர் என்பதற்குச் சொல்லியிருக்கும் அர்த்தத்திலிருந்து வெளிப்படையாய் விலக்கப்பட்டிருக்கும் வகுப்புகள் ஒன்றில் சேருவதாகத் தெரிந்து திருப்தியடைவதன்மேல், அந்த நபர் இந்த ஆக்டின் காரியங்களுக்காகக் குடியேறுகிறவரல்லவென்று கண்டு அப்படிப்பட்ட நபருக்கு ஸெர்டிபிகேட் ஒன்று சவதரிக்கவேண்டும்.

சம்ரட்சகரின் அலுவல்களைச் செய்ய நபர்களை நியமிப்பதற்கான அதிகாரம்.

5. (1) குடியேறுகிறவர்களின் சம்ரட்சகர் இராத குறித்த யாதொரு விஸ்தீர்ணத்தில், பிரதேச கவர்ன்மெண்டார் - ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனாலவர்களின் மேல்விசாரணைகுட்பட்டு, குடியேறுகிறவர்களின் சம்ரட்சகருக்கு இந்த ஆக்டின்படியுள்ள சகல அலுவல்களையுமாவது அவைகளில் எதையாவது செய்ய யாதொரு நபரை நியமிக்கலாம்.

1860-ம் வருஷத்து 45-வது ஆக்ட்.

(2) அந்தப்படி நியமிக்கப்படும் ஒவ்வொரு நபரும் இந்தியன் பினல் கோடின் தாற்பரியப்படி ஸர்க்கார் உத்தியோகஸ்தராவார்.

வைத்திய பரிசீலகர்களை நியமிப்பது.

6. (1) எந்த ரேவிலிருந்து குடியேறுவது சட்டசம்மதமாகுமோ அப்படிப்பட்ட யாதொரு ரேவிலாவது வேறே யாதொரு இடத்திலாவது குடியேறுகிறவர்களின் வைத்திய பரிசீலகர் ஒருவரையாகிலும் பலரையாகிலும் பிரதேச கவர்ன்மெண்டார் நியமிக்கலாம்; மேலும், ஒருவருக்கு மேற்பட்டு நியமிக்கப்படும்பட்சத்தில், அவரவர்களுக்குரிய வேலைகள் இன்னவையென்று பிரித்துக்கொடுக்கலாம்.

1860-ம் வருஷத்து 45-வது ஆக்ட்.

(2) குடியேறுகிறவர்களின் வைத்திய பரிசீலகர் ஒவ்வொருவரும் இந்தியன் பினல் கோடின் தாற்பரியப்படி ஸர்க்கார் உத்தியோகஸ்தராவார்.

அன்னிய தேசங்களில் ஏஜென்டுகள்.

7. ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் - ப்ரிடிஷ் இந்தியாவுக்கு வெளியிலுள்ள யாதொரு இடத்தில் குடியேறுகிறவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் காரியத்துக்காக, அப்படிப்பட்ட இடங்களில் ஏஜென்டுகளாயிருக்கும்படி நபர்களை நியமிப்பதுடன், அவர்களுடைய அதிகாரங்களும் அலுவல்களும் இன்னின்னவையென்றும் வரையறுக்கலாம்

ஆலோசனை சபைகள்.

8. பிரதேச கவர்ன்மென்டார் - தங்களால் நியமிக்கப்பட்ட யாதொரு குடியேறுகிறவர்களின் சம்ரட்சகருக்காவது 5-வது பிரிவின்படி தங்களால் நியமிக்கப்பட்ட யாதொரு நபருக்காவது உதவிசெய்யும் காரியத்துக்காக, தங்களுக்குத் தகுதியாகத் தோற்றக்கூடிய மாதிரியாய் ஆலோசனை சபை ஒன்றை ஏற்படுத்தி, அந்த சபையார் அனுசரிக்கவேண்டிய நடவடிக்கைமுறையையும் அவர்கள் செய்யவேண்டிய அலுவல்களையும் நிர்ணயிக்கலாம்.

3-ம் அத்தியாயம்.

திறமை வேண்டியிராத வேலை செய்யும் காரியத்துக்காகக் குடியேறுவது.

திறமை வேண்டியிராத வேலை செய்பவர்கள் இன்ன ரேவுகளிலிருந்து குடியேறுவது சட்டசம்மதமாகுமென்பது.

9. (1) கல்கத்தா, சென்னபட்டணம், பம்பாய், கராச்சி, நாகபட்டணம், தூத்துக்குடி, தனுஷ்கோடி ஆகிய ரேவுகளிலிருந்தும், வேறெந்த ரேவுகளிலிருந்து திறமை வேண்டியிராத வேலை செய்யும் காரியத்துக்காகக் குடியேறுவது சட்டசம்மதமாகுமென்று ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் இந்தியா கெஜெட்டில் விளம்பரமூலமாய் நிர்ணயிக்கக்கூடுமோ அப்படிப்பட்ட ரேவுகளிலிருந்துமல்லாமல் மற்ற ரேவுகளிலிருந்து அந்தப்படி குடியேறுவது சட்டசம்மதமாகமாட்டாது.

(2) எந்த ரேவிலிருந்து அந்தப்படி குடியேறுவது சட்டசம்மதமாகுமோ அந்த ரேவின் எல்லைகளை, பிரதேச கவர்ன்மென்டார் - இந்த ஆக்டின் காரியங்களுக்காக பிரதேச ஸர்க்கார் கெஜெட்டில் விளம்பரமூலமாய் நிஷ்கரிஷை செய்யலாம்.

திறமை வேண்டியிராத வேலை செய்பவர்கள் இன்ன தேசங்களுக்குக் குடியேறுவது சட்டசம்மத மாகுமென்பது.

10. (1) ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் இது விஷயமாக இந்தியா கெஜெட்டில் விளம்பரமூலமாய்க் குறிப்பிடக்கூடிய தேசங்கள் தவிர மற்ற தேசங்களுக்கும் அந்தப்படி குறிப்பிடக்கூடிய ஷரத்துகளின்படிக்கும் திட்டங்களின்படிக்குமன்றி மற்றப்படியும் திறமை வேண்டியிராத வேலை செய்யும் காரியத்துக்காகக் குடியேறுவது சட்டசமமதமாகமாட்டாது.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படிக்கான விளம்பரமானது இந்திய சட்டநிருபண சம்பந்தமான இரண்டு சபைகளுக்கு முன்பாகவும் மசோதா ரூபமாய் வைத்து, யாதொரு திருத்தமும் செய்யாமலாவது யாதொன்றையும் சேர்க்காமலாவது அவ்விரு சபையார்களும் ஒப்புக்கொள்ளுகிற திருத்தங்கள் சகிதமாகவும் அவர்கள் ஒப்புக்கொண்டு சேர்க்கிற அம்சங்கள் சகிதமாகவுமாவது ஒவ்வொரு சபையாரும் செய்யும் தீர்மானமூலமாய் அங்கீகரிக்கப்பட்டிருந்தாலன்றி மற்றபபடி, அப்படிப்பட்ட விளம்பரம் எதையும் செய்யக்கூடாது ; ஆனால், அந்தப்படி அங்கீகாரம் செய்யப்படுவதன்மேல், அந்த விளம்பரம் மேலேகண்டபடி அங்கீகரிக்கப்பட்டிருக்கும் ரூபமாகவே வெளிவிடப்படலாம்.

திறமை வேண்டியிராத வேலை செய்பவர்கள் குடியேறுவதை சிறிதுகாலத்துக்கு நிறுத்திவைக்க அதிகாரம்.

11. (1) திறமை வேண்டியிராத வேலை செய்யும் காரியத்துக்காக எந்த தேசத்துக்குக் குடியேறுவது சட்டசம்மதமாகுமோ அப்படிப்பட்ட யாதொரு தேசத்தில் மனித பிராணனுக்கு அபாயகரமான ப்ளேக் என்னும் மஹாமாரியாவது வேறே யாதொரு பெருவாரி வியாதியாவது உண்டாயிருக்கிறதென்றும், குடியேறுகிறவர்களை அந்த தேசத்துக்குக் குடியேறவிட்டால் அவர்கள் அவ்விடத்தில் போய்ச் சேர்ந்தவுடனே அவர்களுக்குப் பிரமாதமாய் பிராணஹானி நேரிடக்கூடுமென்றும் நம்புவதற்கு ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களுக்கு நியாயமிருக்குமாகில், அவர் - இந்தியா கெஜெட்டில் விளம்பரம் பிரசுரித்து அதன்மூலமாய் அப்படிப்பட்ட தேசத்துக்கு திறமை வேண்டியிராத வேலைசெய்யும காரியத்துக்காகக் குடியேறுவது இனி சட்டசம்மதமாகமாட்டாதென்று பிரசித்தஞ் செய்யலாம்.

(2) திறமை வேண்டியிராத வேலைசெய்யும் காரியத்துக்காக எந்த தேசத்துக்குக் குடியேறுவது சட்டசம்மதமாகுமோ அபபடிப்பட்ட யாதொரு தேசத்தில், (1) குறிப்பிட்ட உட்பிரிவில் விவரிக்கப்பட்டபடிக்குள்ள நிலைமை ஏற்பட்டிருக்கிறதென்று நம்புவதற்குப் பிரதேச கவர்ன்மென்டாருக்கு நியாயம் இருக்கும் பட்சத்திலே, அவர்கள் - தங்களால் பரிபாலிக்கப்படும் ராஜ்ஜியங்களிலுள்ள எந்த ரேவிலிருந்தாவது திறமை வேண்டியிராத வேலை செய்யும் காரியத்துக்காக அந்த தேசத்துக்குக் குடியேறுவது ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களுக்கு சங்கதி தெரிவித்து உத்தரவு வருகிறவரையிலே சட்டசம்மதமாயிராதென்று பிரதேச ஸர்க்கார் கெஜெட்டில் விளமபரமூலமாய்ப் பிரசிததஞ் செய்யலாம்.

(3) (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படி விளம்பரம் பிரசுரிக்கும் பிரதேச கவர்ன்மென்டார் - அப்படிப்பட்ட விளம்பரததைப்பற்றி அதற்குண்டான காரணங்கள சகிதமாக ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களுக்கு உடனே தெரிவிக்கவேண்டும் ; அதன்மேல், அவர் - பிரதேச கவர்ன்மென்டாரால் பிரசுரிக்கபபட்ட விளம்பரத்தை ஊர்ஜிதம் செய்தோ அல்லது ரத்துபண்ணியோ இந்தியா கெஜெடடில் விளமபரம் பிரசுரிகக வேண்டும்.

12. 11-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட யாதொரு விளம்பரமாவது யாதொரு பிரதேச கவர்ன்மென்டாரால் செய்யப்பட்ட விளம்பரத்தை ஊர்ஜிதம் செய்து 11-வது பிரிவைச் சேர்ந்த (3) குறிப்பிட்ட உட்பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட யாதொரு விளம்பரமாவது என்ன முகாந்தரத்தைக்கொண்டு யாதொரு தேசத்தின் விஷயமாய்ப் பிறப்பிக்கப்பட்டிருக்கிறதோ அந்த முகாந்தரம் நீங்கிப்போயிருப்பதாக ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் தெரிந்து திருப்தியடைந்தால், அவர் - இந்தியா கெஜெட்டில் விளம்பரம் பிரசுரித்து, அந்த விளம்பரத்தில் குறிப்பிடப்படும் தேதி முதல் அப்படிப்பட்ட தேசத்துக்குத் திறமை வேண்டியிராத வேலை செய்யும் காரியத்துக்காகக் குடியேறுவது மறுபடியும் சட்டசம்மதமாகுமென்று பிரசித்தஞ்செய்யலாம்.

தடுத்து வைத்திருப்பதை அடித்துவிடுவது.

13. (1) ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள்-இந்தியா கெஜெட்டில் விளம்பரம் பிரசுரித்து, அந்த விளம்பரத்தில் குறிப்பிடப்படும் தேதி முதற்கொண்டும் காரணங்களுக்காகவும், யாதொரு பிரதேச கவர்ன்மென்டாரின் பரிபாலனத்திற்குட்பட்ட ராஜ்ஜியங்களிலிருந்தாகிலும் அவைகளின் குறித்த யாதொரு பாகத்திலிருந்தாகிலும் திறமை வேண்டியிராத வேலை செய்யும் காரியத்துக்காக குறித்த யாதொரு தேசத்துக்கு சகல நபர்களுமாவது குறித்த யாதொரு வகுப்பைச் சேர்ந்த நபர்களாவது குடியேறக்கூடாதென்று தடுக்கலாம்.

குறித்த யாதொரு தேசத்துக்குக் குடியேறக்கூடாதென்று தடுக்க ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களுக்கு இருக்கும் அதிகாரங்கள்.

(2) இந்தப் பிரிவின்படி வெளியிடப்படும் பிரதி விளம்பரத்தையும், அது வெளியிடப்பட்ட பிறகு கூடுமான சீக்கிரத்தில் இந்திய சட்டநிரூபண சம்பந்தமான இரண்டு சபைகளுக்கும் முன்பாக வைக்கவேண்டும்.

14. 10-வது பிரிவின்படியாவது 11-வது பிரிவின்படியாவது 12-வது பிரிவின்படியாவது 13-வது பிரிவின்படியாவது வெளியிடப்பட்ட யாதொரு விளம்பரத்தினால், அந்த விளம்பரம் செலாவணியாகத் தொடங்கும் தேதிக்குமுன்னமே செய்யப்பட்ட யாதொரு காரியத்துக்காகிலும் குற்றத்துக்காகிலும் ஆரம்பிக்கப்பட்ட சட்டப்படிக்கான யாதொரு நடவடிக்கைக்காகிலும் பாதகம் உண்டாகமாட்டாது.

நிவாரணை.

4-ம் அத்தியாயம்.

திறமை வேண்டியிருக்கும் வேலை செய்யும் காரியத்துக்காகக் குடியேறுவது.

15. திறமை வேண்டியிராத வேலை செய்யும் காரியத்துக்காக எந்த ரேவிலிருந்து குடியேறுவது சட்டசம்மதமாகுமோ அப்படிப்பட்ட யாதொரு ரேவிலிருந்தும் ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் இது விஷயமாக இந்தியா கெஜெட்டில் விளம்பர மூலமாய்க் குறிப்பிடக்கூடிய வேறே ரேவுகளிலிருந்துமல்லாமல் மற்ற ரேவுகளிலிருந்து திறமை வேண்டியிருக்கிற வேலை செய்யும் காரியத்துக்காகக் குடியேறுவது சட்டசம்மதமாகாது.

திறமை வேண்டியிருக்கும் வேலை செய்பவர்கள் இன்ன ரேவுகளிலிருந்து குடியேறுவது சட்டசம்மதமாகுமென்பது.

16. (1) திறமை வேண்டியிருக்கும் வேலை செய்யும் காரியத்துக்காக யாதொரு நபரைக் குடியேறும்படி அமர்த்திக்கொள்ளவாவது, குடியேறுவதற்கு அவருக்கு உதவிசெய்யவாவது எவராகிலும் விரும்பினால், அவர் - அந்த நபர் எந்த ரேவிலிருந்து புறப்படப் போகிறாரோ அந்த ரேவில் அதிகாரம் செலுத்தும் பிரதேச கவர்ன்மென்டாரின் அனுமதிக்காக விண்ணப்பஞ் செய்துகொள்ள வேண்டியதுமல்லாமல், அந்த விண்ணப்பத்திலே—

திறமை வேண்டியிருக்கும் வேலை செய்பவர்கள் குடியேறுவது

(a) அவர் எத்தனை பேரை அந்தப்படி அமர்த்திக்கொள்ளவாகிலும், எத்தனை பேருக்கு அந்தப்படி உதவிசெய்யவாகிலும் உத்தேசிக்கிறாரோ அதையும்,

(b) அப்படிப்பட்ட ஒவ்வொரு நபரும் அவரையடுத்த நபர்களும் இந்தியாவின் எல்லைகளுக்கு அப்பால் எந்த இடத்துக்குப் போகப்போகிறார்களோ அந்த இடத்தையும்,

(c) இந்தியாவுக்கு வெளியே போகிறவரையிலும், கடற்பிரயாணம் செய்யும் போதும் அப்படிப்பட்ட ஒவ்வொரு நபருக்கும் அவரை அடுத்த நபர்களுக்கும் சவதரிக்க வேண்டிய வசதிபிடத்தையும்,

கண்டெழுதவும்வேண்டும்.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவில் விவரிக்கப்பட்டிருக்கும் காரியத்துக்காக யாதொரு நபரை அமர்த்திக்கொள்ள எவராகிலும் விரும்பினால், அவர் - அந்த உட்பிரிவின்படி தம்முடைய விண்ணப்பத்தில் சவதரிக்கவேண்டியிருக்கிற சங்கதியுடன்கூட, அதில்—

(a) அப்படிப்பட்ட நபரும் அவரை அடுத்த நபர்களும் உத்தேசித்தபடி அமர்த்திக்கொள்ளப்பட்டிருக்கும் காலத்தில் தேகாரோக்கியத்துடன் க்ஷேமமாயிருப்பதற்காகவும்

அந்தக் காலம் முடிவானவுடன் அவர்களை சுதேசத்திற்கு மீண்டும் கொண்டுபோய்ச் சேர்ப்பதற்காகவும் செய்யப்படும் ஏற்பாட்டையும்,

(b) இன்ன ஒப்பந்த ஷரத்துகளின்படி அந்த நபர் அமர்த்திக்கொள்ளப்படப் போகிருரென்பதையும்,

(c) அந்த ஒப்பந்தத்தைக் கிரமமாய் அனுசரித்து நடப்பதற்காகவும், அமர்த்திக் கொள்ளப்படப்போகும் நபரையும் அவரை அடுத்த நபர்களையும் சரியாய் நடத்துவதற்காகவும், ப்ரிடிஷ் இந்தியாவில் அவர் சவதரிக்க உத்தேசிக்கிற ஜாமீனையும் கண்டெழுதவும் வேண்டும்.

விண்ணப்பங்களை இன்னபடி பைசல் செய்யவேண்டுமென்பது.

17. 16-வது பிரிவின்படி செய்துகொள்ளப்பட்ட விண்ணப்பத்தை வரப்பெற்றுக் கொண்டதன்மேல், பிரதேச கவர்ன்மென்டார் - தங்களுக்கு அவசியமாகத் தோற்றும் விசாரணை செய்தபிறகு, தங்களுக்கு தகுதியாகத் தோற்றுகிற ஷரத்துகளும் திட்டங்களும் ஏவையேனுமிருந்தால் அவைகளின்படிக்கும், கட்டணங்கள் ஏவையேனுமிருந்தால் அவைகள் செலுத்தப்படுவதன்மேலும், கேட்கப்படும் அனுமதியைக் கொடுக்கலாம், அல்லது அவ்வனுமதி கொடுக்காமலிருந்துவிடலாம்; மேலும், பிரதேச கவர்ன்மென்டாருடைய தீர்மானம் முடிவானதாகும்.

அமர்த்திக்கொள்ளப்பட்டவர்கள் குடியேறுகிறவர்களின் சம்ரட்சகருக்குமுன் ஹாஜராவதும் பெயர்களை அவர் ரெஜிஸ்டர் செய்துகொள்வதும்.

18. (1) 17-வது பிரிவின்படி கொடுக்கப்பட்ட அனுமதியை அனுசரித்து யாதொரு நபர் ப்ரிடிஷ் இந்தியாவை விட்டுப்போவதற்குமுன்னே, அவரை அமர்த்திக்கொண்டவர் அல்லது அவருக்கு உதவி செய்தவர் - நேராகவாவது கிரமமாய் அதிகாரம் கொடுக்கப்பெற்ற தம்முடைய ஏஜென்ட் மூலமாகவாவது முதலில் சொல்லப்பட்ட அந்த நபரோடும் அவரை அடுத்த நபர்களாக அவரோடுபோக உத்தேசிப்பவர்கள் யாராவதிருந்தால் அவர்களோடும், கப்பலேறும் ரேவிலுள்ள குடியேறுகிறவர்களின் சம்ரட்சகருக்கு முன்பாக ஹாஜராகவேண்டும்.

(2) (a) அநத நபரை அமர்த்திக்கொள்ளவாவது அவருக்கு உதவி செய்யவாவது கிரமமாய் அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறதென்றும்,

(b) அமர்த்திக்கொள்ளப்பட்டிருக்கும் விஷயத்தில், எந்த உடன்படிக்கையின்படி அந்த நபர் அமர்த்திக்கொள்ளப்பட்டிருக்கிருரோ அந்த உடன்படிக்கையின் ஷரத்துகளானவை கொடுக்கப்பட்ட அனுமதியின் ஷரத்துகளை அனுசரித்திருக்கின்றனவென்றும், அவரால் தெரிந்துகொள்ளப்பட்டிருக்கின்றனவென்றும்,

(c) என்ன திட்டங்களின்படி அந்த அனுமதி கொடுக்கப்பட்டதோ அந்த திட்டங்கள் நிறைவேறியிருக்கின்றனவென்றும்

குடியேறுகிறவர்களின் சம்ரட்சகருக்குத் தோற்றுமாகில், அவர் - அந்தப்படி அமர்த்திக் கொள்ளப்பட்ட அல்லது உதவிசெய்யப்பட்ட நபரைப்பற்றியும் அவரை அடுத்த நபர்கள் யாராவதிருந்தால் அவர்களைப்பற்றியும் அவரை அமர்த்திக்கொள்ளுகிற அல்லது அவருக்கு உதவிசெயகிறவரைப் பற்றியும் பிரதேச கவர்ன்மென்டாரால் நிர்ணயிக்கப்படக்கூடிய விவரங்களை அவர்களால் நிர்ணயிக்கப்படக்கூடிய நமூனுப்படி இதற்கென்று வைக்கப்படும் புஸ்தகத்தில் ரெஜிஸ்டர் செய்யவேண்டும்.

ஜாமீனைப்பற்றிய நிபந்தனைகள்.

19. 16-வது பிரிவைச் சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவில் சொல்லியிருக்கும் ஜாமீன் கொடுக்கப்பட்டிருக்குமாகில், பிரதேச கவர்ன்மென்டார் - தங்களுக்கு அவசியமாகத் தோற்றக்கூடிய விசாரணை செய்தபிறகு எப்போதாயினும் அந்த ஜாமீன் முழுவதையுமாவது அதில் எவ்வளவையாவது பறிமுதல் செய்வதைக்குறித்தும் அதையாகிலும் அதில் எவ்வளவையாகிலும் உபயோகிப்பதைக் குறித்தும் உத்தரவு பிறப்பிக்கலாம்; அன்றியும், அவர்கள்-ஷை உடன்படிக்கை எந்தக் கால அளவுக்குச் சம்பந்தப்படுகிறதோ அந்தக் கால அளவு கழிந்துபோவதன்மேலும் ஜாமீன் முழுவதுமாவது அதில் எவ்வளவாவது பறிமுதலாவதற்குக் காரணம் இல்லையென்று தெரிந்து திருப்தியடைவதன்மேலும், அந்த ஜாமீனைக் கட்டினவருக்காகிலும் அவருடைய பிரதிநிதிக்காகிலும் அதையாயினும் அதில் எவ்வளவையாயினும் வாபஸ் செய்யும்படி உத்தரவு பண்ணலாம்.

விண்ணப்பங்களை வரப்பெறுக்கொள்ளவோ பைசல் செய்யவோ அதிகாரத்தைக் குடியேறுகிறவர்களின் சம்ரள்சகருக்குக் கொடுப்பது.

20. இந்த அத்தியாயத்தின்படி செய்துகொள்ளப்படும் விண்ணப்பங்களை வரப்பெற்றுக்கொள்ளவும் பைசல் செய்யவும் வேண்டியிருக்கும் அதிகாரத்தைப் பிரதேச கவர்ன்மென்டார் - பிரதேச ஸர்க்கார் கெஜெட்டில் விளம்பரமூலமாகக் குடியேறுகிறவர்களின் சம்ரட்சகருக்குக் கொடுக்கலாம்:

ஆனால், அந்தப்படி கொடுக்கப்பட்ட அதிகாரத்தைச் செலுத்துகையில் குடியேறுகிறவர்களின் சம்ரட்சகரால் பிறப்பிக்கப்படும் ஒவ்வொரு உத்தரவின்மீதும் பிரதேச கவர்ன்மென்டாருக்கு அப்பீல் உண்டு.

திறமை வேண்டியிருக்கிற வேலை செய்பவர்கள் குடியேறுவதைத் தடுக்க அதிகாரம்.

21. (1) திறமை வேண்டியிருக்கிற வேலைசெய்பவர்கள் யாதொரு தேசத்துக்குக் குடியேறுவதைத் தடுப்பதற்காகப் போதுமான காரணங்கள் இருக்கின்றனவென்று நம்புவதற்கு ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களுக்கு முகாந்தரம் இருக்குமாகில், அவர்-இந்தியா கெஜெட்டில் விளம்பரம் பிரசுரித்து, அந்த விளம்பரத்தில் குறித்த ஒரு தேதி முதற்கொண்டு அந்த தேசத்துக்கு அந்தப்படி குடியேறுவது சட்டசம்மதமாகாமற்போகுமென்று பிரசித்தஞ் செய்யலாம்; அந்தத் தேதிமுதற்கொண்டு ஷை தேசத்துக்கு அந்தப்படி குடியேறுவது அப்பிரகாரமே சட்டசம்மதமற்றதாய்ப்போகும்.

(2) இந்தப் பிரிவின்படி வெளிவிடப்படும் பிரதி விளம்பரத்தையும் அது வெளிவிடப்பட்ட பிறகு கூடுமான சீக்கிரத்தில் இந்திய சட்டநிருபண சம்பந்தமான இரண்டு சபைகளுக்கும் முன்பாக வைக்கவேண்டும்.

நிவாரணை.

22. யாதொரு நபர் வேறொரு நபரைத் தம்முடைய சொந்த வீட்டுவேலையாளாக இந்தியாவுக்கு வெளியே தம்முடன்கூட அழைத்துக்கொண்டு போக அமர்த்திகொண்டால், அப்படிப்பட்ட யாதொரு விஷயத்துக்கு இந்த அத்தியாயத்தில் கண்டதெதுவும் பிரயோகப்படமாட்டாது.

5-ம் அத்தியாயம்.

விதிகள்.

விதிகள் செய்யப் பிரதேச கவர்ன்மெண்டாருக்குள்ள அதிகாரம்.

23. ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களின் மேல்விசாரணைக்குட்பட்டு, பிரதேச கவர்ன்மெண்டார் - பிரதேச ஸர்க்கார் கெஜெட்டில் விளம்பரம் பிரசுரித்து அதன்மூலமாக, 2-வது பிரிவைச் சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவில் சொல்லியிருக்கும் யாதொரு சந்தேகமாவது விவாதமாவது இன்ன நபரால் தீர்மானஞ் செய்யப்படவேண்டுமென்பதையும், அப்படிப்பட்ட விஷயங்களில் இன்ன நடவடிக்கை முறை அனுசரிக்கப்படவேண்டுமென்பதையும் இன்ன ருஜு கேட்கப்படவேண்டுமென்பதையும் நிர்ணயிப்பதற்காகவும், இந்த ஆக்டின்படி நிர்ணயிக்க அவர்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிற வேறே யாதொரு விஷயத்துக்காக ஏற்பாடு செய்வதற்காகவும் இந்த ஆக்டுக்குப் பொருத்தமாயுள்ள விதிகள் செய்யலாம்.

விதிகள் செய்ய ஆலோசனைசபையிலுள்ள கவர்னர் ஜெனரல் அவர்களுக்குள்ள அதிகாரம்.

24. (1) ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் - இந்தியா கெஜெட்டில் விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாகவும், முன்னதாய்ப் பிரசித்தஞ்செய்தபிறகும், இந்த ஆக்டில் கண்ட நிபந்தனைகளை நிறைவேற்றும் காரியத்துக்காக விதிகள் செய்யலாம்.

(2) முக்கியமாகவும் முந்திய அதிகாரத்தின் பொதுத்தன்மைக்கு பாதகமில்லாமலும் ஷை விதிகள் மூலமாய்—

(a) இந்த ஆக்டின்படி ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களால் நியமிக்கப்படும் பற்பல உத்தியோகஸ்தர்களின் அதிகாரங்கள், அலுவல்கள் ஆகிய இவைகள் விஷயமாகவும்,

(b) நபர்களைக் குடியேறும்படித் தூண்டும் வேலை சம்பந்தமாகவும் அந்தப்படி தூண்டப்பட்ட நபர்களை அழைத்துக்கொண்டுபோய் அவர்களுக்கு வசதியிடம் ஏற்படுத்திக்கொடுப்பது சம்பந்தமாகவும் ப்ரிடிஷ் இந்தியாவில் அமர்த்திக்கொள்ளப்பட்டிருக்கும் சகல நபர்களுக்கும் லைஸென்ஸ் கொடுப்பது, அவர்களை மேற்பார்வையிடுவது, மேல்விசாரணை செய்வது ஆகிய இவைகள் விஷயமாகவும்,

(c) குடியேறுகிறவர்களுக்காக எவையேனும் வசதியிடங்களை ஸ்தாபிப்பது, அவர்களுக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் வசதியிடங்களை மேற்பார்வையிடுவது, அவைகளைக்குறித்து ஒழுங்கேற்படுத்துவது ஆகிய இவைகள் விஷயமாகவும், அவர்கள் அங்கே தங்கியிருக்கும்போது அவர்களுக்கு வைத்தியம் செய்வது விஷயமாகவும்,

(d) (b) குறிப்பிட்ட பகுதியின்படி தயார் செய்யப்பட்டிருக்கும் விதிகளின் பிரகாரம் வைத்துவரவேண்டிய நமூனுக்கள் விஷயமாகவும் லைஸென்ஸ் கொடுக்கப்பெற்றிருக்கும் நபர்கள் அனுப்பவேண்டிய ரிடர்ன் என்னும் விவரக்கணக்குகள் விஷயமாகவும்,

(e) (b) குறிப்பிட்ட பகுதியின்படி தயார் செய்யப்பட்டிருக்கும் விதிகளின் பிரகாரம் லைஸென்ஸ் கொடுக்கப்பெற்றிருக்கும் நபர்கள் குடியேறுகிறவர்களுக்குச் சவதரிக்கவேண்டிய சங்கதி விஷயமாகவும், அந்த சங்கதியை இன்ன பாஷையில் சவதரிக்கவேண்டுமென்பது விஷயமாகவும்,

(f) டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டுகளுக்கு முன்பாவது இதுவிஷயமாய் நியமிக்கப்படக்கூடிய வேறே அதிகாரிகளுக்கு முன்பாவது குடியேறுகிறவர்களை ஹாஜர்ப்படுத்தி பரிசீலனை செய்வது விஷயமாகவும்,

(g) புருஷர்களாகிலும் ஸ்திரீகளாகிலும் இன்ன வயதுக்குக் குறைந்திருந்தால், அவர்கள் அடுத்த நபர்களாகவன்றி மற்றப்படி குடியேறக்கூடாதென்பது விஷயமாகவும்,

(h) குடியேறுகிறவர்களை ஏற்றிக்கொண்டுபோவதற்காகப் பிரத்தியேகமாய் வாடகைக்கு அமர்த்திக்கொள்ளப்பட்டிருக்கும் யாதொரு கப்பலில் இருக்கவேண்டிய வசதியிடம், சாமக்கிரிகள், விறகு முதலிய அவசியமான வஸ்துக்கள், வைத்திய சம்பந்தமான சாமான்கள், வைத்திய சிப்பந்தி, பிராணுபாயம் நேரிடாதபடி காப்பாற்றுவதற்கும் சுகாதாரத்துக்கும் சம்பந்தப்பட்ட ஏற்பாடுகள் ஆகிய இவைகள் விஷயமாகவும், ஷை கப்பலில வைத்துவரவேண்டிய ரெகார்டுகள் விஷயமாகவும்,

(i) திரும்பி வரும் குடியேறினவர்களை ஏற்றுகொண்டு அவர்களை அவர்கள் வீடுகளுக்கு அனுப்புவது விஷயமாகவும்,

(j) இந்தியாவை விட்டுப்போகும் ஒவ்வொரு குடியேறுகிறவருக்காகவும் குடியேறுகிறவர்களின் ஏஜெனடுகளால் குடியேறுகிறவர்களின் சம்ரட்சகர்களுக்குச் செலுத்தப்படத்தக்க கட்டணங்கள் எவையேனுமிருந்தால் அவைகள் விஷயமாகவும்.

(k) பொதுவாய், குடியேறுகிறவர்கள் வாஸ்தவமாக இந்தியாவை விட்டுபோகிற தேதிவரையிலும் அவர்கள் இந்தியாவுக்குத் திரும்பிவருவதன்மேலும் அவர்களின் பத்திரம், க்ஷேமம், பாதுகாப்பு ஆகிய இவைகள் விஷயமாகவும்

நிபந்தனை ஏற்படுத்தலாம்.

6-ம் அத்தியாயம்.

குற்றங்கள்.

சட்டவிரோதமாய்க் குடியேறுவது அல்லது குடியேறும்படித் தூண்டுவது.

25. (1) இந்த ஆக்ட் அல்லது இந்த ஆக்டின்படி செய்யப்பட்ட விதிகளில் கண்ட நிபந்தனைகளுக்குப் பொருத்தமாகவன்றி மற்றப்படி எவராகிலும் குடியேறினாலும் குடியேற எத்தனப்பட்டாலும், அவர் - ஐம்பது ரூபாய்க்கு மேற்படாமல் அபராத தண்டனை விதிக்கப்படத்தக்கவராவார்.

(2) இந்த ஆக்ட் அல்லது இந்த ஆக்டின்படி செய்யப்பட்ட விதிகளில் கண்ட நிபந்தனைகளின்படிக்கன்றி மற்றப்படி, எவராகிலும்,—

(a) யாதொரு நபரையாவது வேறே யாதொரு நபரையாவது குடியேறும்படி கட்டுப்படுத்துவதாகப் பொருள்படுகிற யாதொரு உடனபடிக்கையை முதலில சொன்ன நபருடன் செய்துகொண்டாலும் செய்துகொள்ள எத்தனப்பட்டாலும்,

(b) குடியேறும்படியாவது குடியேற எத்தனிக்கும்படியாவது குடியேறும் காரியத்துக்காக யாதொரு இடத்தை விட்டுபோகும்படியாவது யாதொரு நபரைத் தூண்டினாலும் தூண்ட எத்தனப்பட்டாலும்,

(c) தம்மால் அமர்த்திக்கொள்ளப்பட்ட அல்லது உதவி செய்யப்பட்ட யாதொரு நபரை, 17-வது பிரிவில் சொல்லியிருக்கும் அனுமதி கொடுக்கப்பட்ட பிறகு 18-வது பிரிவைச் சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படி எந்த விவரங்களை ரெஜிஸ்டர்செய்ய வேண்டுமோ அந்த விவரங்களை ரெஜிஸ்டர் செய்யாமலே கடல் மார்க்கமாய் ப்ரிடிஷ் இந்தியாவை விட்டு வெளியே போகச்செய்தாலும்,

அவர் - ஐந்நூறு ரூபாய்க்கு மேற்படாத அபராத தண்டனை விதிக்கப்படத்தக்கவராவார்.

(3) இந்தப் பிரிவின்படி யாதொரு நபர் குற்றஞ்செய்தால், அவரை வாரண்டில்லாமலே யாதொரு பொலீஸ் உத்தியோகஸ்தர் பிடிக்கலாம்.

குடியேறும்படி மோசடியாய்த் தூண்டுவது.

26. எவராவது லாகிரி மூலமாகவாகிலும் நிர்ப்பந்தம் அல்லது மோசஞ்செய்தாகிலும் யாதொரு நபரைக் குடியேறும்படியாவது குடியேறுவதாய் உடன்படிக்கை செய்துகொள்ளும்படியாவது குடியேறும்பொருட்டு யாதொரு இடத்தை விட்டுப் போகும்படியாவது செய்தாலும் தூண்டினாலும் அந்தப்படி செய்யவோ அல்லது தூண்டவோ எத்தனப்பட்டாலும், அவர் - ஒரு வருஷத்துக்கு மேறபடாமல் ஒரு கால அளவுக்குக் காவல் தண்டனையாகிலும் அபராத தண்டனையாகிலும் இவ்விரண்டு தண்டனைகளுமாகிலும் விதிக்கப்படத்தக்கவராவார்.

கவர்ன்மென்ட் அதிகாரம் இருப்பதாகப் பொய்யாய்த் தெரிவிப்பது.

27. குடியேறுகிறவர்கள் எவராவது கவர்ன்மென்டாருக்கு வேண்டியிருக்கிறார்களென்றோ கவர்ன்மென்டார் சார்பில் அவர்களை அமர்த்திக் கொள்ளப்போவதாகவோ எவராகிலும் பொய்யாகத் தெரிவித்தால், அவர் - ஆறுமாதத்துக்கு மேற்படாத ஒரு கால அளவுக்குக் காவல்தண்டனையாகிலும் ஐந்நூறு ரூபாய்க்கு அதிகப்படாமல் அபராத தண்டனையாகிலும் இவ்விரண்டு தண்டனைகளுமாகிலும் விதிக்கப்படத்தக்கவராவார்.

பிராதுகள் தொடர அனுமதி.

28. குடியேறுகிறவர்களின் சம்ரட்சகருடைய அனுமதியாவது, 5-வது பிரிவின்படி நியமிக்கப்பட்டு இது விஷயமாய் அதிகாரம் கொடுக்கப்பெற்றிருக்கும் யாதொரு நபரின் அனுமதியாவது, சம்ரட்சகராகிலும் மேலேகண்டபடி நியமித்து அதிகாரம் கொடுக்கப்பெற்றிருக்கும் நபராகிலும் இராதபட்சத்திலே டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டின் அனுமதியாவது இராமல் இந்த அத்தியாயத்தின்படிக்கான யாதொரு குற்றத்திற்காக பிராது எதுவும் தொடரக்கூடாது:

ஆனால், யாதொரு குற்றமானது யாதொரு குடியேறுகிறவரின் விஷயத்திலாகிலும் குடியேற உத்தேசித்திருப்பவரின் விஷயத்திலாகிலும் செய்யப்பட்டிருந்து, அந்த குடியேறுகிறவரோ அந்தப்படி குடியேற உத்தேசித்திருப்பவரோ, அந்தக் குடியேறுகிறவரின் சார்பாகவாகிலும் அந்தப்படி குடியேற உத்தேசித்திருப்பவர் சார்பாகவாகிலும் ஷை குடியேறுகிறவரின் அல்லது குடியேற உத்தேசித்திருப்பவரின் தகப்பன், தாய், புருஷன், மனைவி அல்லது கார்டியனோ, அல்லது ஷை குடியேறுகிறவராவது குடியேற உத்தேசித்திருப்பவராவது ஒரு அவிபக்த ஹிந்து குடும்பத்தைச் சேர்ந்தவராயிருந்தால் அந்தக் குடும்பத்தின் மானேஜரோ பிராது தாக்கல் செய்யும்பட்சத்திலே, மேலேகண்டபடிக்கான அனுமதி எதுவும் வேண்டியதில்லை.

இந்த ஆக்டின் காரியங்களுக்காக சோதனைசெய்து மறியல் பண்ண கஸ்டம்ஸ் ஆபிஸருக்குள்ள அதிகாரம்

29. மரக்கலங்களில் கள்ளத்தனமாய் சரக்குகள் கொண்டுபோவதைத் தடுப்பதற்காக அவைகளைச் சோதனைசெய்து மறியல் செய்வதைக்குறித்தாவது மற்றப்படியாவது ஸீ கஸ்டம்ஸ் உத்தியோகஸ்தர்களுக்கு அந்தந்த காலத்தில் சட்டப்படி கொடுக்கப்பட்டிருக்கும் சகல அதிகாரங்களையும், இந்த ஆக்டுக்கு விரோதமாய்க் குற்றங்களைச் செய்யாமல் தடுக்கும்பொருட்டு அந்த உத்தியோகஸ்தர்கள் செலுத்தலாம்.

7-ம் அத்தியாயம்.

உடன்சேர்க்கையான நிபந்தனைகள்.

கடலுக்கப்பாலிருக்கிற யாதொரு தேசத்திலே கூலிக்கு வேலைசெய்வதாக ஏற்பட்ட உடன்படிக்கையின்படி தரை மார்க்கமாய்ப் போகக்கூடாதென்று தடுப்பது.

30. (1) கடலுக்கப்பாலிருக்கும் யாதொரு தேசத்திலே கூலிக்கு வேலைசெய்வதாக உடன்படிக்கை பண்ணிக்கொண்டாவது, உடன்படிக்கை பண்ணிக்கொள்ளும் நோக்கத்துடனாவது, கூலிக்கு வேலைசெய்யும் அல்லது விவசாயத்தில் அமரும் காரியத்துக்காகவோ அல்லது அந்த உத்தேசத்துடனோ தரைமார்க்கமாய் ப்ரிடிஷ் இந்தியாவை விட்டுப்போக யாதொரு பந்துவாலன்றி மற்றப்படி உதவி செய்யப்பட்டாவது யாதொரு நபர் அந்தப்படி ப்ரிடிஷ் இந்தியாவை விட்டுப்போவது கூடாது.

(2) எவராவது இந்தப் பிரிவுக்கு விரோதமாய் ப்ரிடிஷ் இந்தியாவை விட்டுத் தரைமார்க்கமாய்ப் போனாலும் போக எத்தனப்பட்டாலும், அவர் 25-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி குற்றம் செய்திருப்பதாக எண்ணப்படுவார்

(3) எவராவது இந்தப் பிரிவுக்கு விரோதமாய் யாதொரு நபரைத் தரைமார்க்கமாக ப்ரிடிஷ் இந்தியாவை விட்டுப் போகும்படித் தூண்டினாலும் தூண்ட எத்தனப்பட்டாலும், அவர் - 25-வது பிரிவைச்சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படி குற்றம் செய்திருப்பதாக எண்ணப்படுவார்.

8-ம் அத்தியாயம்.

நிவாரணைகளும் ரத்தும்.

இந்த ஆக்ட் பிரயோகப்படுவது.

31. இந்த ஆக்டில் கண்டதெதுவும்—

(i) இந்திய வம்சத்தைச் சேராத அல்லது இந்தியாவிலுள்ள யாதொரு சமஸ்தானத்தின் குடியாயிராத யாதொரு நபராவது,

(ii) 1911-ம்ஷூத்திய இந்துதேசத்து ராணுவ ஆக்டின்படி பெயர் எழுதிக்கொள்ளப்பட்டிருக்கும் யாதொரு நபராவது 1911-ம்ஷ... த்து 8-வ... ஆக்ட்.

ப்ரிடிஷ் இந்தியாவை விட்டுப் போவதற்குப் பிரயோகப்படுவதாக எண்ணப்படமாட்டாது.

திவாரணை.

32. இந்த ஆக்டில் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, இந்த ஆக்டிற்கண்ட நிபந்தனைகளானவை - இந்த ஆக்ட் வழங்கத் தொடங்கின தேதியிலிருந்து பன்னிரண்டு மாதகாலத்துக்கு, ஸிலோனுக்காவது ஸ்ட்ரெய்ட் ஸெட்டில்மென்டுகளுக்காவது ஸ்ட்ரெய்ட் ஸெட்டில்மென்டுகளுக்கு அடுத்தாற்போலுள்ள பாதுகாக்கப்பட்டுவரும் யாதொரு சுதேச சமஸ்தானத்துக்காவது குடியேறுகிற நபர்களுக்குப் பிரயோகப்படமாட்டா.

ரத்து.

33. இந்துதேசத்து ஆள்கள் குடியேறுவதைக்குறித்த 1908-ம்ஷூத்து ஆக்ட் இதனால் ரத்துசெய்யப்படுகிறது. 1908-ம்ஷ... த்து 17-வ... ஆக்ட்.

எச். மான்க்ரீப் ஸ்மித்,
இந்தியா கவர்ன்மென்ட் ஸெக்ரெடரி.

(A true translation)

C. N. SARAVANA MUDALIYAR,
Tamil Translator to Government.

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.